IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE

(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

SC.NO. 160/2022

Deposition of Witness for P.W.10

| | | |
|---|---|---|
| NAME | - | சுரிய பிரகாஷ் |
| FATHER NAME | - | திரு.அண்ணாமலை |
| VILLAGE | - | கீழ் முட்டுகூர் எல்.என். புரம் |
| TALUK | - | கே,வி,குப்பம் |
| OCCUPATION | - | கூலி. |
| AGE | - | 41. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 15.09.2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 5வது எதிரி ஆஜரில்லை மனு ஏற்பு.

<u>முதல் விசாரணை–</u>

நான் கீழ்முட்டுகூர் கிராமத்தில் குடியிருக்கிறேன். நான் பெட்ரோல் பங்க் வைத்துள்ளேன். 10.06.2020 மதியம் 03.45 மணிக்கு மோர்தானா கால்வாய் போய் வரும்போது கிருஷ்ணன் வீட்டிற்கு எதிரே கிருஷ்ணன் செல்வி அடிப்பட்டு வீட்டிற்கு வெளியே இருந்தார்கள். அவர்கள் கை உடைந்து தலையில் அடிப்பட்டு இருந்தார்கள். நான் மேகன் முன்னால் கவுன்சிலருக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். ஆம்புலன்சுக்கு போன் செய்து சொன்னேன். ஆம்புலன்சில் கிருஷ்ணன் செல்வி அவர்களை ஏற்றி அனுப்பினோம். பின்னிட்டு கிருஷ்ணன் இறந்துவிட்டதாக மருத்துவமனையிலிருந்து தகவல் வந்தது. போலிசார் என்னை விசாரித்தார்கள். எப்படி அடிப்பட்டது என்று எனக்கு தெரியாது.

சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி அனுமதி கோரி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கொடுக்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

முருகன் காந்தி பாஸ்கரன் தாமோதரன் மோகன்ராஜ் சரண்ராஜ் நவீன்ராஜ் அனைவரும் சேர்ந்து கிருஷ்ணன் கட்டியிருந்த பம்புசெட்டை கடப்பாறையால் உடைத்துவிட்டு கிருஷண்ன செல்வியை அசிங்கமாக திட்டி நீங்கள் செத்தால் தான் இந்த இடம் தீர்வுக்கு வரும் என்று சொல்லி ஆளுக்கு ஒரு கொம்பால் கை கால் மற்றும் தலையில் கிருஷ்ணன் மற்றும் செல்வியை மாறி மாறி அடித்தார்கள் என்றும் நான் கிருஷ்ணன் செல்விக்கு தண்ணீர் கொடுக்கப் போகும்போது என்னையும் மிரட்டினார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 15.09.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

15-9-25

Additional District Judge (FTC),
Vellore.